DECEMBER 2022 **P/ID 35314/PTL1D**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. 'தமிழ் விடு தூது' யார் யாரிடம் தூது விடுப்பதனை எடுத்துரைக்கிறது?

2. தமிழ் எப்பால் குடித்து வளர்ந்ததாகத் தமிழ்விடு தூது குறிப்பிடுகிறது.

3. பள்ளு இலக்கிய வகை யாருடைய வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கிறது?

4. முக்கூடற்பள்ளில் இடம்பெறும் பள்ளன் பள்ளியர் குறித்தெழுதுக.

5. பண்ணையாரின் தோற்றத்தினை முக்கூடற்பள்ளு எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

6. குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் குறித்து எழுதுக.

7. குற்றாலக் குறவஞ்சியில் இடம் பெறும் பறவைகளின் வகைகளை எழுதுக.

8. நந்தி அரசனின் வெற்றியைக் காணச் சென்ற பெண்ணின் நிலையினைக் குறிப்பிடுக.

9. ‘காஞ்சிபுரமும் பாடி ஆடோமோ ஊசல்’ என்னும் அடிகளில் இடம்பெறும் ஊர் குறித்து எழுதுக.

10. ‘வீரம் செல்லும் விடேல் விடுகு’ என்னும் அடிகள் நந்திவர்மனை எவ்வாறு காட்டுகிறது?

11. பரணி இலக்கியத்தின் தனிச்சிறப்பினை எழுதுக.

12. ‘திருக்கடைத் திறப்பு’ என்பது எதனைக் குறிக்கும்?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

13. ‘இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்’ என்னும் அடிகள் உணர்த்த விழைவதனை விளக்குக.

14. தமிழின் செங்கோலாகப் பிரம்பு இருப்பதனை தமிழ்விடுதூது எங்ஙனம் எடுத்துரைக்கிறது?

15. ‘வடிவழகக் குடும்பன் நானே’ எனத் தன் பெருமைகளை எடுத்துரைக்கும் பள்ளனின் பண்பு நலன்களை எழுதுக.

16. குற்றால மலையின் வளத்தைப் பாடும் குறவஞ்சிப் பாடலின் அருமையினை விளக்கியுரைக்க.

17. நந்திக் கலம்பகத்தின் உறுப்புகள் குறித்து எழுதுக.

18. ‘சிவனை முழுவதும் மறவாத சிந்தையான்’ என நந்திவர்மனைப் போற்றும் திறம் குறித்து எழுதுக.

19. கலிங்கத்துப் பரணியில் போரின் போராலி எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. தமிழ்விடுதூது தமிழ்மொழியை மன்னனாக உருவகம் செய்துள்ள திறம் குறித்துக் கட்டுரைக்க.

21. உழவுத் தொழிலின் சிறப்புக்களை முக்கூடற்பள்ளு இலக்கியத்தின் வழிநின்று விளக்குக.

22. திருக்குற்றால நாதரிடம் வசந்த வல்லி கொண்ட காதலின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.

23. 'நன் கடம்பூர் வானேறு வளைந்து வென்ற மன்னர் ஏறே' என்னும் அடிகள் நந்திவர்மனின் புகழை எங்ஙனம் எடுத்துரைக்கிறது.

24. கலிங்கத்துப் பரணியில் காடு பாடும் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.

———————